## தமிழகத்தில் யாருக்கும் நிபா வைரஸ் பாதிப்பு இல்லை

# மழைக்கால நோய்களுக்கான முன்னெச்சரிக்கை சிறப்பு மருத்துவ முகாம்; தி.நகரில் மா.சுப்பிரமணியன் துவக்கினார்

சென்னை, ஜூலை 25–

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று சென்னை கோடம்பாக்கம் மண்டலம், தியாகராய நகர், சிஐடி நகர், ஸ்ரீராம் பேட் பகுதியில் நடைபெற்ற மழைக்கால நோய்களுக்கான முன்னெச்சரிக்கை சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு நோய்த்தடுப்பிற்கான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தமிழகத்தில் யாருக்கும் நிபா வைரஸ் பாதிப்புகள் இல்லை என்றும் அவர் கூறினார்.



பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

கடந்த 3 ஆண்டுகளாக மழைக்கால நோய் பாதிப்புகள் அனைத்தும் கட்டுக்குள் உள்ளது. கடந்த ஆண்டை பொறுத்தவரை அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரை 10,000 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் என்ற வகையில் 26,000 க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, மிகப்பெரிய அளவில் நோய் பாதிப்புகள் கட்டுப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் நேற்று வரை 6,565 பேர் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், பன்றிக் காய்சலினால் 390 பேரும், புளு காய்ச்சலினால் 56 பேரும், எலிக் காய்ச்சலினால் 1,481 பேரும், உன்னி காய்ச்சலினால் 2,639 பேரும், வெறி நாய்கடியினால் பாதிக்கப்பட்டவர்கள் 22 பேரும், மஞ்சள் காமாலையினால் 1750 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் பன்றிக் காய்ச்சல், புளு காய்ச்சல், எலிக் காய்ச்சல், உன்னி காய்ச்சல், மஞ்சள் காமாலையினால் உயிரிழப்புகள் இல்லை, டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவமனையினை அனுகாததன் காரணமாகவும், அவர்களின் உடல்களில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்ததன் காரணமாகவும், 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

### நடமாடும் பள்ளி மருத்துவ குழுக்கள்

இன்று தியாகராய நகர் தொகுதிக்குட்பட்ட சி.ஐ.டி நகரில் சிறப்பு காய்ச்சல் தடுப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டு வீடுகள் தோறும் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளது. பொதுவாகவே பருவநிலை மாற்றங்களின் போது ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்காக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், 476 நடமாடும் மருத்துவ குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் பணியாற்றிக்கொண்டிருக்கின்றனர்.

அதேபோல் 805 RBSK என்று சொல்லப்படும் நடமாடும் பள்ளி மருத்துவ குழுக்கள் இயங்கி வருகின்றது. ஏதாவது ஒரு தெருவிலோ, ஏதாவது ஒரு சிற்றூரிலோ அல்லது ஏதாவது ஒரு மலைக் கிராமத்திலோ மூன்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு காய்ச்சல் பாதிப்புகள் ஏற்பட்டால், அங்கே உடனடியாக மருத்துவ முகாம்கள் நடத்தும் வகையில் இந்த குழுக்கள் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை 2972 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தினசரி காய்ச்சல் கண்டவர்களுடைய அறிக்கை பெறப்பட்டு வருகிறது. அப்படி பெறப்பட்ட அறிக்கைகளை எந்த வகையான காய்ச்சல் பாதிப்புகள் ஏற்படுகிறது என்று கண்டறியப்பட்டு தீர்வு காணப்பட்டு வருகிறது.

மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கொசுப் புழு உற்பத்தியாவதை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. 22,384 தினசரி தற்காலிக பணியாளர்கள் இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டு அன்றாடம் புகை மருந்து அடிப்பது, கொசு மருந்து தெளிப்பது, அபேட் தெளிப்பது போன்ற பல்வேறு கொசுப் புழுக்களை தடுக்கும் பணியினை செய்து வருகிறார்கள்.

### 16,005 புகை மருந்து அடிக்கும் இயந்திரம்

தமிழ்நாட்டில் 16,005 புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளது. அதற்கு தேவையான மருந்துகள் குறிப்பாக பைரித்திரம் 51,748 லிட்டர், மாலத்தியான் 17,816 லிட்டர் மற்றும் டெமிபாஸ் 33,446 லிட்டர் கையிருப்பில் உள்ளது. கொசுத்தடுப்பு பணிகளுக்கு தேவையான மருந்துகள் அனைத்தும் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது. காய்ச்சல் பாதிப்புகள் யாருக்கேனும் ஏற்பட்டால் தன்னிச்சையாக மருத்துவர்களின் பரிந்துரைகள் இல்லாமல் மருந்து மாத்திரைகளை உட்கொள்ள வேண்டாம். யாருக்கேனும் அவசர உதவி தேவைப்பட்டால் 104, 108 போன்ற அவசர எண் உதவிகளை நாடவேண்டும்.

### நிபா வைரஸ்: 8 பேர் பலி

கடந்த வாரம் கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் பாதிப்புகளினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது. உடனடியாக முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு கேரளா மற்றும் தமிழ்நாடு எல்லைகளை பாதுகாக்கும் பணியில் பொது சுகாதாரத் துறை தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது. கேரளா மாநிலத்தில் இருந்து வரும் போக்குவரத்து வாகனங்கள், பேருந்துகள், கார்கள் போன்ற அனைத்து வாகனங்களையும், பயணிகளை பரிசோதிக்கும் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக நடுங்கனி, சோழடி, தளூர், நம்பியார்குன்னு, பட்டாவயல் போன்ற 5 இடங்களில் நிரந்தர முகாம்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிபா வைரஸ் பாதிப்புகள் தமிழ்நாட்டில் யாருக்கும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, துணைமேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் ஆணையாளர் வி.ஜெயசந்திர பானுரெட்டி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நியமனக் குழு உறுப்பினர் ராஜா அன்பழகன், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணி, பொது சுகாதாரத் துறை இயக்குநர் தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி இயக்குநர் சங்குமணி, மாநகர நல அலுவலர் எம்.ஜெகதீசன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கர்நாடக சட்டமன்றத்தில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் உள்ளிருப்பு போராட்டம்: சித்தராமையாவுக்கு நெருக்கடி

பெங்களூர், ஜூலை 25–

கர்நாடக சட்டசபையில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் நேற்று இரவு உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மைசூரு நகர வளர்ச்சி ஆணையம் (முடா) ஊழல் குறித்து சட்டசபையில் விவாதிக்க அனுமதி கோரியும், முதலமைச்சர் சித்தராமையா பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியும் எதிர்க்கட்சித் தலைவர் ஆர். அசோக், பாஜக மாநில தலைவர் பி.ஒய்.விஜயேந்திரா உள்பட பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் இரவு முழுவதும் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர்.

பாஜக எம்.எல்.ஏ.க்களுக்கு மதசார்பற்ற ஜனதா தள கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் சிலரும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

சட்டசபைக்கு படுக்கைகளுடன் வந்த சில எம்எல்ஏக்கள் அங்கேயே படுத்து உறங்கினர். மேல்சபை எதிர்க்கட்சி தலைவர் சலவாதி நாராயணசாமி தலைமையில் எம்.எல்.சி.க்களும் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கர்நாடக மாநில பாஜக எக்ஸ் தளத்தில் பகிரப்பட்டுள்ள இந்த காணொலிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றது. இந்த போராட்டம் குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள பி.ஒய்.விஜயேந்திரா தெரிவித்திருப்பதாவது:–

முதல்வர் சித்தராமையா செய்த மைசூரு முடா ஊழலை கண்டித்தும், அவரை பதவி விலகக் கோரியும் வளர்ச்சி ஏற்படுத்தாத காங்கிரஸ் அரசுக்கு எதிராகவும் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. வால்மிகி ஊழலை தொடர்ந்து முடா மூலம் சட்டவிரோதமாக 14 மனைகளை முதல்வரின் மனைவி பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊழலில் தந்தையான சித்தராமையா, முதல்வர் பதவியின் கண்ணியத்தையும், கவுரவத்தையும் கெடுத்துவிட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

சட்டசபை, மேல்சபையில் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வரும் வேளையில், முதல்வர் சித்தராமையா, நேற்று மாலை திடீரென கவர்னர் தாவர்சந்த் கெலாட்டை சந்தித்து பேசினார். 20 நிமிடங்களுக்கும் மேலாக இந்த சந்திப்பு நடந்தது. அப்போது, வால்மீகி மேம்பாட்டு ஆணைய முறைகேடு, 'மூடா' முறைகேடு தொடர்பாக கவர்னருக்கு முதல்வர் தன்னிலை விளக்கம் அளித்ததாக கூறப்படுகிறது.

மைசூரில் மாற்று நிலம் ஒதுக்குவதில் பெரிய அளவிலான ஊழலில் மைசூரு நகர வளர்ச்சி ஆணையம் (முடா) ஈடுபட்டுள்ளதாக கன்னட ஊடகத்தில் சமீபத்தில் செய்தி வெளியாகி இருந்தது. முதலமைச்சர் சித்தராமையாவின் மனைவி பார்வதிக்கும் மாற்று நிலம் ஒதுக்கியதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இதன்மூலம் ரூ. 3,800 கோடி ஊழல் நடைபெற்றதாக புகார் எழுந்துள்ளது. இதுதொடர்பாக, விசாரணை நடத்த நகர்ப்புற ஆணையங்களின் ஆணையர் ஆர்.வெங்கடாசலபதி தலைமையில் மாநில அரசு குழு அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடலில் குறைந்து வரும் ஆக்சிஜன்: கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து?

நியூயார்க், ஜூலை 25–

கடலில் ஆக்சிஜன் அளவு குறைந்து வருவதால், மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஆய்வு தெரிவித்துள்ளது.

பூமியில் அண்மை காலமாக பல்வேறு காரணங்களால் பருவநிலை மாற்றத்தை உலகம் சந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில், எதிர்காலத்தில் நீர்நிலைகளில் உயிரினங்களே வாழ முடியாத நிலை உண்டாகும் ஆபத்து உள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிய வந்துள்ளது.

உலகம் முழுவதும் 75 சதவீதம் பகுதி கடலால் சூழப்பட்டுள்ள நிலையில், கடலில் ஏராளமான உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. பெரும்பாலும் உலகின் பெரும்பகுதி தண்ணீராக உள்ள கடல் இருந்தாலும் நன்னீர் என்பது மிகவும் குறைவாகவே உள்ளது.

நன்னீர், கடல் நீர் என எதில் உயிரினங்கள் வாழ்ந்தாலும் அவற்றிற்கு ஆக்ஸிஜன் முக்கியமானதாக உள்ளது.

நீர்நிலைகளில் வாழும் உயிரினங்கள் நீரில் உள்ள ஆக்ஸிஜன்களை செவில்கள் போன்ற பகுதிகளால் சுவாசித்து உயிர் வாழ்கின்றன. ஆனால் அண்மை காலமாக நீர்நிலைகளில் உள்ள நீரில் ஆக்ஸிஜன் அளவு குறைந்து வருவதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது. இது இப்படியே தொடர்ந்தால் நீரில் வாழும் உயிரினங்கள் சரியான அளவு ஆக்ஸிஜன் கிடைக்காமல் மொத்தமாக அழிந்துவிடும் ஆபத்து உள்ளதாக அமெரிக்க ஆய்வாளர்கள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர்.


Butterfly
A Crompton Subsidiary

**பட்டர்பிளை காந்திமதி அப்ளையன்சஸ் லிமிடெட்**

CIN No:L28931TN1986PLC012728

பதிவு அலுவலகம்: 143, புதுப்பாக்கம் கிராமம், வண்டலூர் - கேளம்பாக்கம் ரோடு, கேளம்பாக்கம் - 603 103

Phone: 044-49005154; Email: cs@butterflyindia.com; Website: www.butterflyindia.com

**30 ஜூன், 2024–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை**
**செபி (LODR) ஒழுங்குமுறைகள் 2015ன் ஒழுங்குமுறை 47(1)(b) ஐப் பார்க்கவும்**

ரூ. லட்சத்தில்

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | 30.06.2024 | 31.03.2024 | 30.06.2023 | 31.03.2024 |
| | | தணிக்கை செய்யாதது | தணிக்கை யானது | தணிக்கை செய்யாதது | தணிக்கை யானது |
| 1 | செயல்பாடு மூலம் மொத்த வருமானம் | 18,170.47 | 16,638.20 | 21,898.16 | 93,128.25 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 352.16 | (2,460.45) | 1,566.04 | 774.40 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 352.16 | (2,671.99) | 1,566.04 | 562.86 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 251.83 | (1,976.45) | 1,473.03 | 738.98 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது) | 239.01 | (2,000.77) | 1,453.26 | 654.48 |
| 6 | சம பங்கு மூலதனம் | 1,787.96 | 1,787.96 | 1,787.96 | 1,787.96 |
| 7 | கடந்த ஆண்டு தணிக்கையான பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | பொருந்தாது | பொருந்தாது | பொருந்தாது | 27,350.74 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (ரூபாயில்) காலாண்டு மற்றும் அரையாண்டு உடன் முடிந்த காலங்களுக்கான வருடாந்திரம் அல்ல | | | | |
| | அ) அடிப்படை | 1.41 | (11.05) | 8.24 | 4.13 |
| | ஆ) பலமிழந்தது | 1.41 | (11.05) | 8.24 | 4.13 |

**குறிப்புகள்**

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சகளில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.butterflyindia.comல் உள்ளது.
2. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு நடைமுறைகள் மற்றும் கோட்பாடுகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட கம்பெனிகள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள் 2015ன்படி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

குழு சார்பாக
பட்டர்பிளை காந்திமதி அப்ளையன்சஸ் லிமிடெட்
காளீஸ்வரன் அருணாசலம்
இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : ஜூலை 24, 2024


# சிவகாசியில் காதல் திருமணம் செய்த இளைஞர் வெட்டிக் கொலை: 3 பேர் கைது

சிவகாசி, ஜூலை 25–

ஸ்ரீவில்லிபுத்தூர் இந்திரா நகரைச் சேர்ந்த மாரிமுத்து மகன் கார்த்திக் பாண்டி (26). இவர் சிவகாசியில் மெக்கானிக் வேலை செய்தபோது அதே பகுதியில் உள்ள கடையில் வேலை செய்த சிவகாசி மகாத்மா காந்தி நகரைச் சேர்ந்த பொன்னையா மகள் நந்தினி குமாரி (22) என்பவரைக் காதலித்துள்ளார். இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களின் காதலுக்கு நந்தினி குமாரியின் அண்ணன்கள் தனபாலன், பாலமுருகன் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த எதிர்ப்பையும் மீறி கார்த்திக் பாண்டியும் நந்தினி குமாரியும் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு திருமணம் செய்துகொண்டனர். திருமணத்துக்குப் பிறகு இருவரும் அய்யம்பட்டியில் வீடு எடுத்து தனியாக வசித்து வந்தனர். இந்த நிலையில், நேற்று இரவு 9 மணியளவில் நந்தினி குமாரியை அழைத்துச் செல்வதற்காக கார்த்திக் பாண்டி சூப்பர் மார்க்கெட்டுக்கு வந்துள்ளார். அங்கு பைக்கில் வந்த சிலர் கார்த்திக்பாண்டியை வழிமறித்து அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் சரமாரியாக வெட்டிவிட்டு கண் இமைக்கும் நேரத்தில் தப்பி சென்றனர். இதில் பலத்த காயம் அடைந்த கார்த்திக் பாண்டி, நந்தினி வேலை செய்த கடையின் முன்பே நடுரோட்டில் ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக இறந்தார். கணவர் அரிவாளால் வெட்டப்பட்டதை அறிந்து சூப்பர் மார்க்கெட்டில் இருந்து நந்தினி அலறியபடி ஓடிவந்தார். கணவரின் உடலை பார்த்து கதறினார். போலீசார் கார்த்திக் பாண்டியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த ஆணவ படுகொலை தொடர்பாக பாலமுருகன், தனபாலன் மற்றும் சிவா ஆகிய 3 பேரை கைது செய்துள்ளனர்.


**INDUS FINANCE LIMITED**

REGD Office: "KOTHARI BUILDINGS", 4TH FLOOR, 114, M.G.ROAD, NUNGAMBAKKAM, CHENNAI – 600 034. Ph: 044-28331310 Email: contact@indusfinance.in

(CIN No. L65191TN1992PLC022317)

**EXTRACT OF UN-AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30.06.2024**

Rs. In Lakhs

| Particulars | Quarter ended | | | Year ended |
|---|---|---|---|---|
| | 30.06.2024 | 31.03.2024 | 30.06.2023 | 31.03.2024 |
| | Un-Audited | Audited | Un-Audited | Audited |
| Total income from operations (Gross) | 91.67 | 185.47 | 66.69 | 398.99 |
| Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary Items) | 4.80 | 84.17 | 23.29 | 136.92 |
| Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and Extraordinary Items) | 4.80 | 36.11 | 23.29 | 88.85 |
| Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary Items) | 4.80 | 22.25 | 23.29 | 74.99 |
| Total Comprehensive Income for the period (Comprising Profit / Loss for the period (after tax) and other comprehensive Income (after tax)) | 173.71 | -66.73 | 57.81 | 375.66 |
| Paid up Equity Share Capital of Rs. 10/- each | 925.83 | 925.83 | 925.83 | 925.83 |
| Reserves (excluding Revaluation Reserve) | | | | |
| Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations) | | | | |
| Basic (in Rs.): | 0.05 | 0.24 | 0.25 | 0.81 |
| Diluted (in Rs.): | 0.05 | 0.24 | 0.25 | 0.81 |

Notes:

1. The above is an extract of the detailed format of the Financial Results for the Quarter ended on 30th June 2024 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full formats of the Financial Results were reviewed by the Audit Committee and approved at the Meeting of the Board of Directors of the Company at the Meeting held on 24th July, 2024 and the same is available on the Stock Exchange website. (www.bseindia.com) and Company's Website www.indusfinance.in

For INDUS FINANCE LIMITED
Sd/-
Bala Venckat Kutti
Chairman - Din No. 00765036

Place: Chennai
Date: 24-07-2024



**ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்** ramco

பதிவு அலுவலகம்: 47, பிஎஸ்கே நகர், ராஜபாளையம்–626 108.

கார்ப்பரேட் அலுவலகம்: 64, சர்தார் பட்டேல் ரோடு, தரமணி, சென்னை–600 113.

CIN: L72300TN1997PLC037550 E-mail : investorRelations@ramco.com Website: www.ramco.com

**ஜூன் 30, 2024–ல் முடிந்த காலாண்டுக்கான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

| | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | | | | முடிந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஜூன் 30, 2024 | | மார்ச் 31, 2024 | | ஜூன் 30, 2023 | | மார்ச் 31, 2024 | |
| | | தணிக்கையாகாதது | | தணிக்கையானது (குறிப்பை பார்க்க) | | தணிக்கையாகாதது | | தணிக்கையானது | |
| | | Rs. Mln. | USD Mln. | Rs. Mln. | USD Mln. | Rs. Mln. | USD Mln. | Rs. Mln. | USD Mln. |
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 1,382.55 | 16.67 | 1,323.40 | 16.00 | 1,399.42 | 17.13 | 5,298.93 | 64.41 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டத்திற்கு முன்) | (182.49) | (2.20) | (208.96) | (2.49) | (483.03) | (5.91) | (2,437.26) | (29.63) |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)(விலக்கு அயிட்டத்திற்கு பின்) | (182.49) | (2.20) | (208.96) | (2.49) | (483.03) | (5.91) | (2,437.26) | (29.63) |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டத்திற்கு பின்) | (195.56) | (2.36) | (229.85) | (2.75) | (468.04) | (5.73) | (2,416.72) | (29.38) |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்) உள்ளடக்கியது) | (195.83) | (2.40) | (184.35) | (2.31) | (420.34) | (5.08) | (2,361.65) | (29.44) |
| 6. | சம பங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/–) | 355.24 | 6.65 | 354.55 | 6.64 | 352.75 | 6.62 | 354.55 | 6.64 |
| 7. | நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள ரிசர்வுகள் (மறுமதிப்பீடு நீங்கலான ரிசர்வுகள்) | | | | | | | 2,759.14 | 30.88 |
| 8. | காலத்திற்கான ஒரு பங்கு சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டத்திற்கு முன் மற்றும் பின்) ரூபாய் மற்றும் அமெரிக்க டாலரில் ஒவ்வொன்றும் ரூ.10 (வருடாந்திரம் ஆண்டு கணக்கிற்கு மட்டும்) | | | | | | | | |
| | அடிப்படை | (5.54) | (0.07) | (6.52) | (0.08) | (13.27) | (0.16) | (68.51) | (0.83) |
| | பலமிழந்தது | (5.54) | (0.07) | (6.52) | (0.08) | (13.27) | (0.16) | (68.51) | (0.83) |

குறிப்பு

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் கம்பெனியின் இணையதளம் www.ramco.com மற்றும் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் என்எஸ்இ இணையதளம் www.nseindia.com–ல் உள்ளது.
2. ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட், இந்தியா (''கம்பெனி''), அதன் துணை நிறுவனங்கள் (ஒன்றாக 'குழு' என்று குறிப்பிடப்படுகிறது) மற்றும் அதன் அசோசியேட்டின் மேற்கண்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு ஜூலை 24, 2024 அன்று நடைபெற்ற இயக்குநர் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. பொருந்தகூடிய விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தர நிலைகள் (இன்ட் ஏஎஸ்)ன் படி ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குழுமத்தின் ஜூன் 30, 2024ல் முடிந்த காலாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளை சட்ட தணிக்கையாளர்கள் தணிக்கை மேற்கொண்டு அவர்களது மாற்றப்படாத ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளனர்.
3. ஜூன் 30, 2024–ல் முடிந்த காலாண்டுக்கான கம்பெனியின் தனியான நிதிநிலை முடிவுகளின் முக்கிய விவரம்

ரூ. மில்லியனில்

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|
| | ஜூன் 30,2024 | மார்ச் 31, 2024 | ஜூன் 30,2023 | மார்ச் 31, 2024 |
| | தணிக்கையாகாதது | தணிக்கையானது (குறிப்பை பார்க்க) | தணிக்கையாகாதது | தணிக்கையானது |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 668.56 | 830.65 | 656.00 | 2,756.67 |
| வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்) | (211.78) | (24.00) | (329.77) | (1,196.42) |
| வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) | (201.40) | (20.75) | (312.36) | (1,131.70) |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்) உள்ளடக்கியது) | (201.77) | (26.43) | (313.39) | (1,143.71) |

4. நடப்பு காலத்திற்கான கணக்குகளுடன் ஒப்பிட எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கடந்த கால கணக்குகளுடன் மறுவகைபடுத்தப்பட்டுள்ளன. மார்ச் 31, 2024ல் முடிந்த காலாண்டு கணக்குகள், மார்ச் 31, 2024–ல் முடிந்த முழு நிதி ஆண்டுக்கான தணிக்கையான முடிவுகள் மற்றும் டிசம்பர் 31, 2023ல் முடிந்த மூன்றாவது காலாண்டுக்கான வெளியிடப்பட்ட கணக்குகள் இடையே சமன் செய்யப்பட்டவையாகும்.

குழு உத்தரவுப்படி
ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்டிற்காக
P.V. அபினவ் ராமசுப்பிரமணியம் ராஜா
முழு நேர இயக்குனர்

இடம்: சென்னை
தேதி: ஜூலை 24, 2024